**கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவச் செயற்திட்டம் - 2022**

-----------------------------------------------------------------------------------

கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவச் செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாய சோசலிச குடியரசிற்கும் தற்போது ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை என தற்போது அறியப்படும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் வங்கிக்கும் இடையில் கைச்சாத்திட்ட 2010 மார்ச் 26 ஆந் திகதிய எஸ்எல்-பி 99 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவிருந்த தற்போதைய நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை செயற்திட்டத்தின் அமுலாக்கும் முகவராக உள்ளது. சனத்தொகை அதிகமாகவுள்ள பகுதிகளில் சிறந்த சுகாதார வசதிகளின் புனரமைப்பு உள்ளடங்கலாக கண்டி நகரத்தில் கழிவு நீர் சேகரித்தல், சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் என்பவற்றிற்காக முறையான முறைமையொன்றை நிர்மாணிப்பதன் மூலம் சிறந்த சுகாதார வசதிகள் ஊடாக வாழ்க்கைச் சூழல் மற்றும் மகாவலி ஆற்றின் தண்ணீர் தரத்தினை முன்னேற்றுதல் அதன் மூலம் அப்பகுதியிலுள்ள மக்களின் வாழ்க்கைத்தரம் மற்றும் நல்ல நிலையை உயர்த்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 21,982 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 17,278 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 17,922 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 14,087 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டதுடன் மிகுதி ரூபா 4,060 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 3,191 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2010 பெப்ரவரி 03 இல் தொடங்கியிருந்ததுடன் 2017 செப்தெம்பர் அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. பின்னர், செயற்திட்டத்தின் காலப்பகுதி 2022 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

என்னனுடைய அறிக்கையின் அட்டவணை 02 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள்/கணக்காய்வு விடயம் | முகமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2010 ஆம் ஆண்டிலிருந்து செயற்திட்டத்தில் வேலை செய்கின்ற 17 உத்தியோகத்தர்களிற்காக ரூபா 3.5 மில்லியன் மானிய ஏற்பாடு இலங்கை கணக்கீட்டு நியமம் 37 இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் உத்தியோகத்தர்களின் நியமனம், சம்பளத் தயாரிப்பு மற்றும் கொடுப்பனவு தலைமை அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்டதுடன் இந்த மானிய ஒதுக்கீடு தொடர்பான ஏற்பாடுகளை தலைமை அலுவலகம் மேற்கொள்ள வேண்டும். | கணக்கீட்டு நியமங்களுடன் இணங்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 07 ஆம் பந்திக்கு முரணாக ரூபா 6.3 மில்லியன் பெறுமதியான அலுவலக உபகரணம் மற்றும் கணனி உபகரணங்கள் நடைமுறை வேலைகளாக கணக்கிடப்பட்டிருந்தது. | நாங்கள் நடைமுறை வேலைகளிலிருந்து இந்தச் சொத்துக்களை அகற்றி கணக்காய்வு விளக்கங்களின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் அவற்றைக் காட்டுவோம். | கணக்கீட்டு நியமங்களுடன் இணங்க வேண்டும். |
| (இ) | ஒப்பந்தகாரரால் வழங்கப்பட்ட 2022 யூலை இலிருந்து கண்டி மாநகரசபையால் செயற்திட்ட நிர்மாண வேலைகளுக்காக பயன்படுத்தப்பட்டு வருகின்ற ரக்கரின் பெறுமதி ரூபா 16 மில்லியன் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க, நடைமுறையல்லாச் சொத்துக்கள் மற்றும் அட்டுறுச் செலவீனங்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | ஒப்பந்தகாரருக்கு முழுக்கொடுப்பனவும் வழங்கப்பட்டதும் டபிள்யூபி டீஏச் - 8099 இலக்க வாகனத்திற்குரிய கொடுப்பனவை சொத்தாக செயற்திட்டம் கணக்கிடும். | உரிய பேரேட்டுக் கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | இரண்டு காணி நிலங்களின் கொள்வனவிற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 1.1 மில்லியன் கொடுப்பனவு கணக்கிடப்பட்டிருக்காததுடன் அதற்கிணங்க நடைமுறையல்லாச் சொத்துக்களின் மீதி அதே தொகையால் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. | செயற்திட்டத்துடன் தொடர்புடைய காணி தொடர்பான செலவீனங்கள் உரிய பிரிவுகளிடமிருந்து பெறப்படுமென்பதுடன் அது பின்னர் மூலதனமாக்கப்படும் என நாங்கள் அறிவிக்கின்றோம். | இந்தக் கணக்கீட்டு வழு திருத்தப்பட வேண்டும். |
| (உ) | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செயற்திட்டத்தின் கீழ் கழிவுநீர் பம்பிங் நிலையங்களை நிர்மாணிப்பதற்காக கங்காவட்ட கோரல பிரதேச செயலகத்திற்கு ரூபா ஒரு மில்லியனை காணியின் சுவீகரிப்பிற்காக செலுத்தியிருந்ததுடன் அந்தத் தொகை காணிக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டது. அதற்கிணங்க, 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காணிகளின் பெறுமதி அதே தொகையால் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. | செயற்திட்டத்துடன் தொடர்புடைய காணி தொடர்பான செலவீனங்கள் உரிய பிரிவுகளிடமிருந்து பெறப்படுமென்பதுடன் அது பின்னர் மூலதனமாக்கப்படும் என நாங்கள் அறிவிக்கின்றோம். | சரியான முறையில் காணி கையேற்கப்பட வேண்டுமென்பதுடன் சரியாக கணக்கிடப்பட வேண்டும். |
| (ஊ) | நிதி அமைச்சால் விநியோகிக்கப்பட்ட 2014 சனவரி 17 ஆந் திகதிய எப்வி/06/20/03/119 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம், செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களிற்கு வற் மற்றும் சுங்கத் தீர்வைகள் விலக்களிக்கப்பட்டுள்ளது. எனினும், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களிற்காக விலக்களிக்கப்பட்ட ரூபா 1,418.2 மில்லியன் தொகையான வற் மற்றும் சுங்கத்தீர்வை நடைமுறைவேலை மற்றும் இலங்கை அரசாங்கத்தின் கணக்கின் கீழ் பதிவுசெய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க, நடைமுறைவேலை மற்றும் இலங்கை அரசாங்க கடன் அதே தொகையால் அதிகரித்துக்காட்டபட்டிருந்தது. | இந்த விலக்களிக்கப்பட்ட வற் மற்றும் சுங்கத்தீர்வைகள் செயற்திட்டத்தின் செலவீனங்களாக காட்டப்பட்டதுடன் இது கடன்&ஆம்ப் மானியக் (உள்நாட்டு) கணக்கிற்கு எடுக்கப்பட்டிருந்தது. | தற்போதுள்ள கணக்கீட்டு வழு திருத்தியமைக்கப்பட வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கிடையிலான தொடர்பு | இணங்காமை/கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| முகாமைத்துவக் கணக்காய்வு சுற்றறிக்கை 02/2016 | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் செயற்திட்டத்தின் ஆரம்பத்திலிருந்து 2022 திசெம்பர் 31 வரையிலும் உள்ளகக் கணக்காய்வாளரொருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக செயற்திட்டமானது தலைமை அலுவலகத்திற்கு ஏற்கனவே அறிவித்திருந்தது. | செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் மீது தொடர்ச்சியான உள்ளகப் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3. பௌதீகச் செயன்முன்னேற்றம்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீகச் செயன்முன்னேற்றம்

| இல | செயற்திட்டக் கூறு | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவப் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசு |
|---|---|---|---|---|
| (அ) | பொதி 1 – கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறி | உடன்படிக்கையின் பிரகாரம், உபகரணத்தின் உத்தரவாதகாலப்பகுதி 2025 யூலை வரை கொடுக்கப்பட்டிருந்தது எனினும், ஒப்பந்தகாரர் 2022 திசெம்பர் 31 அளவில் உடன்படிக்கையின் பிரகாரம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை நிறுத்தியிருந்தார்கள். எனினும், உபகரணத்தில் இனங்காணப்பட்ட குறைபாடுள்ள 26 கேசஸை பொருத்தும் வேலையில் ஒப்பந்தகாரர் ஈடுபட்டிருக்கவில்லையென்பதுடன் மேற்கூறப்பட்ட அடிப்படையின் பிரகாரம் இது தொடர்பில் செயற்திட்டத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அடையாளங்காணப்பட்ட குறைபாடுகளை அடிப்படையாகக் கொண்டு உத்தரவாத உடன்படிக்கையின் பிரகாரம் உரிய மதிப்பிடப்பட்ட கிரயத்தின் பிணைமுறியை காசாக மாற்றுவதற்கு கோரல் கடிதத்தை வங்கிக்கு அனுப்பியிருந்தது. | தாபிப்பிக்கப்பட்ட உபகரணத்தின் செயலாற்றல் தொடர்பில் தொடர்ச்சியான உள்ளகப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் சேதங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. |
| (ஆ) | பொதி 3- சொத்து இணைப்புக்கள் | ஒப்பந்தத்தின் அமுலாக்கல் திட்டத்தின் பிரகாரம் ஒப்பந்தம் 2021 யூலை இல் பூர்த்திசெய்யப்பட வேண்டும் ஆனால், இது திட்டமிடப்பட்டவாறு பூர்த்திசெய்யப்பட்டிருக்காததுடன் இது 2022 ஒக்தோபர் 21 இல் இடைநிறுத்தப்பட்டிருந்தது. 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரதான கழிவகற்றல் இணைப்பிற்கு 9,502 உள்ளக மற்றும் உள்ளகமற்ற இணைப்புக்களை இணைப்பதற்கு திட்டமிடப்பட்டதுடன் 6,063 இணைப்புக்கள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டதுடன் 3,769 இணைப்புக்கள் மாத்திரம் பிரதான கழிவகற்றல் இணைப்பிற்கு இணைக்கப்பட்டது. | செய்முறைக் கொடுப்பனவை மேற்கொள்ள தவறியமையால் செயன்முன்னேற்றம் இல்லாமல் ஒப்பந்தகாரர் அதே தொடக்கங்களை பேணுவதால் மேலதிகக்கிரயத்தை குறைப்பதற்காக இடைநிறுத்தல் விநியோகிக்கப்பட்டது. | காலதாமதமில்லாமல் செயற்திட்ட நடவடிக்கைகளை இடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| பெடிக் வழிகாட்டியின் 14.7 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம், செயற்திட்டம் இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழ் பெற்ற பின்னர் 56 நாட்களிற்குள் பட்டியல் கொடுப்பனவை தீர்ப்பனவு செய்ய வேண்டும். எவ்வாறாயினும், வழிகாட்டியின் பிரகாரம் காலாவதித் திகதி கடந்திருந்த முன்னைய ஆண்டுடன் தொடர்புடைய ரூபா 97 மில்லியன் பெறுமதியான 05 சிட்டைகளின் கொடுப்பனவு மற்றும் மீளாய்வாண்டுடன் தொடர்புடைய ரூபா 284 மில்லியன் பெறுமதியான 15 சிட்டைகளின் தீர்ப்பனவுகள் தொடர்பில் ஒழுங்கமைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க, தாமதமான கொடுப்பனவுகள் மீது தீவிர இடர் உள்ளது என அவதானிக்கப்பட்டது. | பாதீட்டின் அனுமதி தாமதமடைந்தமையால் கொடுப்பனவு முதலில் தாமதமடைந்ததுடன் தொடர்ச்சியாக இலங்கை அரசாங்கம் கடன் மீள்கொடுப்பனவு தாமதமடையும் என அறிவித்தமையால் ஜய்கா வழங்கலை நிராகரித்தமையால் மீண்டும் தாமதமடைந்தது. | காலதாமதமில்லாமல் நிலுவைப் பற்றுச்சீட்டுக்களை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 வழமைக்கு மாறான நடவடிக்கைகள்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த கணக்கெடுப்புச் சபை அறிக்கையின் பிரகாரம், ரூபா 5 மில்லியன் பெறுமதியான கணனிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் பௌதீகரீதியில் இருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது. எனினும், நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆலோசனை உத்தியோகத்தர்களால் பயன்படுத்திவந்த கண்டி மாநாகர சபையிலுள்ள இந்த விடயங்கள் 2022.12.31 இற்குப் பின்னர் கண்டி மாநாகர சபையுடன் செயற்திட்டம் சரிபார்த்து உறுதிப்படுத்தியது.<br><br>இது டீஜீஎம் இற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்விற்கு சரிபார்த்தல் அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சிற்கு கையளிக்கப்பட்ட ரூபா 323 மில்லியன் பெறுமதியான வாகனங்களின் கணக்காய்வினை சரிபார்த்தல் அறிக்கைகளை சமர்ப்பிக்காமையால் பூர்த்தியாக்க முடிந்திருக்கவில்லை. | இது அதற்கிணங்க டிஜிஎம் இற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்விற்கு தகவல்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான விடயங்கள்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், செயற்திட்டம் தொடங்கி கணக்காய்வு திகதியான 2023 யூன் 09 ஆன கணக்காய்வு திகதி வரை 20 வருடங்கள் கடந்திருந்த போதிலும் செயற்திட்ட வேலைகளிற்காக பயன்படுத்தப்பட்ட 09 காணிகளில் 02 காணிகளின் செயற்திட்ட வேலைகளிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. | என்டபிள்யூஎஸ்டிபீ காணிப்பிரிவால் வழங்கப்பட்ட பதிலை இதனுடன் இணைத்துள்ளது. | காலதாமதமில்லாமல் காணி சுவீகரிப்பினை பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2023 யூன் 09 ஆந் திகதிய லான்ட்/சீஈ/கேஏஎன்/ஜீஈஎன்/3833 மதிப்பீட்டுக் கடிதத்தின் பிரகாரம், செயற்திட்டத்துடன் தொடர்புடைய பிரதான பம்பிங் நிலையத்தின் நிர்மாணத்திற்காக காணி சுவீகரிப்பின் நட்டஈடு ரூபா 3 மில்லியனாகவிருந்ததுடன் பின்னர் காணி உரிமையாளர் மதிப்பிடப்பட்ட பெறுமதியானது போதுமானதற்றதாகவிருந்தமையால் நட்டஈடு மீளாய்வு சபை மேன்முறையீட்டை சமர்ப்பித்திருந்தது. எனினும், இறுதித் தீர்மானமானது 2023 யூன் 07 அளவிலும் பெறப்பட்டிருக்கவில்லை. | காணி சுவீகரிக்கப்பட்டதுடன் எம்பீஎஸ் ஏற்கனவே செயற்பாட்டு நிபந்தனையின் கீழ் நிர்மாணிக்கப்பட்டது.காணி உரிமையாளர் நட்டஈட்டைக் கோருவதனால் காணி உரிமையாளர் மாத்திரம் தீர்ப்பனவு செய்வதற்கு மீள்முறையிடவேண்டியுள்ளது. | காலதாமதமில்லாமல் காணி சுவீகரிப்பினை பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |